# யூன் – 11 – திங்கள்

### திருத்தூதர் பர்ணபா

### “என்னுடன் ஆண்டவரை பெருமைப்படுத்துங்கள்“ - திபா34:3

## முதல் வாசகம் : திருத்துதர் பணி 11:21 – 26,13:1– 3

அந்நாட்களில் பெருந்தொகையான மக்கள் நம்பிக்கை கொண்டு ஆண்டவரிடம் திரும்பினர்.இந்தச் செய்தி எருசலேம் திருச்சபையினரின் காதில் விழவே அவர்கள் பர்னபாவை அந்தியோக்கியா வரை சென்று வர அனுப்பிவைத்தார்கள்.அவர் அங்குச் சென்றபோது, கடவுளின் அருள்செயலைக்கண்டு மகிழ்ச்சியடைந்தார் மேலும் உறுதியான உள்ளத்தோடு ஆண்டவரைச் சார்ந்திருக்குமாறு அனைவரையும் ஊக்கப்படுத்தினார். அவர் நல்லவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிறைந்தவராய் பெருந்திரளான மக்களை ஆண்டவரிடம் சேர்த்தார்.பின்பு சவுலைத் தேடி அவர் தர்சு நகர் சென்றார். அவரைக் கண்டு, அந்தியோக்கியாவுக்கு அழைத்து வந்தார். அவர்கள் ஓராண்டு முழுவதும் அந்தச் சபையாரோடு கூடவே இருந்து பெருந்திரளான மக்களுக்குக் கற்பித்து வந்தார்கள். அந்தியோக்கியாவில்தான் முதல் முறையாகச் சீடர்கள் கிறிஸ்தவர்கள் என்னும் பெயரைப் பெற்றார்கள்.அக்காலத்தில் ஏரோது அரசன், திருச்சபையைச் சார்ந்த மக்கள் சிலரைப் பிடித்துக் கொடுமைப்படுத்தினான். யோவானின் சகோதரரான யாக்கோபை வாளால் கொன்றான்.அது யூதருக்கு மகிழ்ச்சி அளித்ததைக் கண்டு அவன் தொடர்ந்து பேதுருவையும் கைது செய்தான். அது புளிப்பற்ற அப்பவிழா நாள்களில் நடந்தது.

**பதில்பாடல் :** பிற இனத்தார் கண்முன்னே ஆண்டவர் தம் நீதியை வெளிப்படுத்தினார்.

## நற்செய்தி : மத்தேயு 5 : 1 - 12

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை. ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர். தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர். நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது. என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே! மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்“ என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தியில் ஆண்டவர் இயேசு யாரெல்லாம் பாக்கியவான்கள் எனக் குறிப்பிடுகின்றாரென நாம் மிகவும் சுலபமாகக் கூறிவிடலாம். எனினும் இன்றைய நற்செய்தியை மிக ஆழமாக நாம் பார்க்கும்போது நற்செய்தியாளர் புனித மத்தேயுவின் பார்வையில் பாலைவன அனுபவத்தின் பின்னர் ஆண்டவர் இயேசுவின் இரக்கமும், கிருபையும் நிறைந்த வல்லமையின் வெளிப்பாடாகவே “மலைப்பொழிவு” அமைந்துள்ளதாகவே நாம் கருத இடமிருக்கின்றது. ஏனெனில் இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக்கொடுத்த அகிம்சா இயக்கத்தின் தந்தையான மகாத்மா காந்தி தனது வாழ்க்கையை மாற்றியமைத்தது “ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவு” என்று கூறியுள்ளதோடு, “கிறிஸ்துவை நேசிக்கிறேன் கிறிஸ்தவர்களை அல்ல” என்றும் கூறியுள்ளார். “மலைப்பொழிவு”நற்செய்தியில் ஆண்டவர் இயேசு எட்டுவிதமான: “ஏழையரின் உள்ளத்தோர்”, “துயருறுவோர்”, “கனிவுடையோர்”, “நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர்”, “இரக்கமுடையோர்”, “தூய்மையான உள்ளத்தோர்”, “அமைதி ஏற்படுத்துவோர்”, “நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர்”, மற்றும் “என்பொருட்டு மக்களால் இகழ்ந்து துன்புறுத்தப் படுவோர் பேறுபெற்றவர்கள் அவர்கள் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்வர்” (மத்தேயு5:3-11) எனவும் திருவாய் மலர்ந்துள்ளார். ஆதியிலே இறைவன் சீனாய் மலையில் மோசே வழியாகப் (விடுதலைப் பயணம்20) பத்துக்கட்டளைகளைக் கொடுத்து இஸ்ராயேல் மக்களை “பேறுபெற்றவர்களாக” வாழ அழைத்தது போன்றே ஆண்டவர் இயேசுவின் மலைப்பொழிவும் அமைந்துள்ளது. எனினும் பத்துக் கட்டளைகளுக்கு அமைவாகவோ, அல்லது மலைப்பொழிவிற்கு அமைவாகவோ நாம் வாழுகின்றோமா? நாம் இவ்வுலகில் எமது பதவி, பட்டம், அதிகாரம், குலம், கோத்திரம் போன்றவைகளைப் பெரிதாக்கி பேறுபெற்ற வாழ்வு வாழ்கிறோம் என மார்தட்டுகிறோம். ஆனால் சிறுமைப்பட்டு, துன்புறுத்தப்பட்டு, கொடுமைப்படுத்தப்பட்டு, ஓரங்கட்டப்பட்டு இவ்வுலகில் தாம் வாழ்ந்தது போன்ற வாழ்க்கையையே நாம் வாழவேண்டும் என்பதனையே இன்றைய நற்செய்தி வழியாக ஆண்டவர் இயேசு. எம்மிடம் எதிர்பார்க்கின்றார்.